கலாத்தியர் 5:1

நீங்கள் மறுபடியும் அடிமைத்தனத்தின் நுகத்துக்குக் கீழ்ப்படாமல் நிலைநில்லுங்கள்.

கலாத்தியர் 5:13

சகோதரரே, நீங்கள் சுயாதீனத்துக்கு அழைக்கப்பட்டிருக்கிறீர்கள். ஆயினும் இந்தச் சுயாதீனத்தைச் சரீர இச்சைகளுக்கு ஏதுவாக்காமல், சிநேகத்தினால் ஒருவருக்கொருவர் ஊழியஞ் செய்யுங்கள்.

கொரிந்தியர் 2 3:17

ஆண்டவரோ இஸ்பிரீத்துவாயிருக்கிறார்; ஆண்டவருடைய இஸ்பிரீத்து எங்கே உண்டோ, அங்கே சுயாதீனமுமுண்டு. (அரு. 4:24.)

அர்ச். அருளப்பர் சுவிசேஷம் 8:36

ஆகையால் குமாரன் உங்களை விடுதலையாக்கினால், மெய்யாகவே நீங்கள் சுயாதீனராயிருப்பீர்கள். (உரோ. 8:2; கலாத். 4:6, 7.)

சங்கீதங்கள் 34:19

அநியாயமாய் என்னோடு எதிர்ப்பவர்களும் முகாந்தரமின்றி என்னைப் பகைத்து கண்சாடை காட்டுகிறவர்களும் எனக்கு விரோதமாகச் சந்தோஷியாதிருக் கட்டும் (அரு. 15:25).

இசாயாஸ் ஆகமம் 61:1

ஆண்டவருடைய இஸ்பிரீத்து வானவர் என்பேரில் அமர்ந்தார்; ஆதலால் ஆண்டவர் என்னைத் தம் பரிசுத்த ஸ்தலத்தால் அபிஷேகஞ் செய்தார்; ஆண்டவர் என்னை அனுப் பினது: சாந்தந் தாழ்மை உடையோ ருக்குப் போதிக்கவும், இருதயம் நொந்தவர்களைக் குணப்படுத்தவும், சிறைப்பட்டவர்களுக்குக் கிருபை யையும், அடைபட்டோருக்கு மீட்பையும் பிரசித்தஞ் செய்யவும் (லூக்.4:18),

கொரிந்தியர் 1 6:12

எல்லாவற்றிற்கும் எனக்கு உத்தரவுண்டு; ஆனாலும் எல்லாம் தகுந்ததல்ல. எல்லாவற்றிற்கும் எனக்கு

உத்தரவுண்டு; ஆயினும் நான் ஒன்றிற் கும் என்னை அடிமையாக்கிக்கொள்ள மாட்டேன். (1 கொரி. 10:23.) மூழுமூ 12. அஞ்ஞான நடுவனிடத்தில் கிறீஸ்தவர்கள் வழக்காடக்கூடாதாவென்று சிலர் கேட்பார்களாக்கும். உத்தரவுதான், என்றாலும் அப்படிச் செய்வது கிறீஸ்தவனுக்கு யோக்கியமல்ல. வேறுவழியாய் அதாவது, திருச்சபையாரைக்கொண்டு நியாயம் பெற்றுக் கொள்ளக்கூடுமாகில் அப்படிச் செய்வதே நலம். ஏனென்றால் கிறீஸ்தவன் சர்வேசுர னுடைய பிள்ளையாயிருக்கிறபடியினாலே, பசாசுக்கடிமையாயிருக்கிற அஞ்ஞானிக ளுடைய அதிகாரத்துக்கு மனம்பொருந்தித் தன்னைக் கீழ்ப்படுத்தப்போவது சரியல்ல வென்று சொல்லத்தகும்.

அர்ச். அருளப்பர் சுவிசேஷம் 8:31-32

ஆகையால் சேசுநாதர் தம்மை விசுவசித்த யூதர்களை நோக்கி: நீங்கள் என் வாக்கியத்திலே நிலைத்திருந்தால், மெய்யாகவே என்னுடைய சீஷர்களா யிருப்பீர்கள். சத்தியத்தையும் அறிந்துகொள்ளு வீர்கள்; சத்தியம் உங்களைச் சுயாதீன ராக்கும் என்றார்.

சங்கீதங்கள் 119:45

உரோமாபுரியார் 1 6:15

அப்படியானால் என்ன? நாம் நியாயப்பிரமாணத்துக்குக் கீழ்ப்பட்டிராமல், வரப்பிரசாதத்துக்குக் கீழ்ப்பட்டிருப்பதால் பாவஞ் செய்வோமோ? சுவாமி இரட்சிக்க!

அப்போஸ்தலருடைய நடபடிகள் 13:38-39

ஆகையால் சகோதர பூமான்க ளே, இவர் மூலமாய் உங்களுக்குப் பாவ மன்னிப்பும், மோயீசனுடைய நியாயப் பிரமாணத்தில் உங்களை நீதிமான்க ளாக்கக்கூடாத சகல விஷயங்களிலும் நின்று (விடுதலையும்) அறிவிக்கப்படு கிறதென்று உங்களுக்குத் தெரிந்திருக் கக்கடவது. இவரில் விசுவாசம் வைக்கிறஎவனும் நீதிமானாக்கப்படுகிறான். (உரோ. 3:26.)

இராயப்பர் பொது நிருபம் 1 2:16

உங்கள் சுயாதீனத்தைத் துர்க்குணத்திற்கு மூடுபோர்வையாகக் கொள் ளாமல், மெய்யாகவே சுயாதீனராய், சர்வேசுரனுடைய ஊழியரைப்போல் பணிந்து நடங்கள்.

உரோமாபுரியார் 1 8:1-2

ஆதலால் இப்போது கிறீஸ்து சேசு நாதருக்கு உட்பட்டவர்களாயிருந்து, மாம்சத்தின்படி நடவாதவர்களுக்கு ஆக்கினைத்தீர்ப்பு யாதேனுமில்லை மூழுமூ 1. இவ்வாக்கியத்தின் அர்த்தமாவது:

பழைய ஏற்பாட்டின் பிரமாணம் பரிசுத்த முள்ளதாயிருந்தது என்றாலும் மாம்ச இச்சைகளுக்கு இன்னும் அடிமைப்பட்டவர்களாய் இருந்த யூதர்களுக்கு அது கொடுக்கப்பட்டதினாலே, அவர்களுடைய மாம்ச பலவீனத்தினாலே அந்தப் பிரமாணமும் பலவீனப்பட்டு, அதன் நீதியை அவர்கள் நிறைவேற்றுவதற்கு அவர்களுக்குப் பலன்கொடுக்கச் சத்துவமில்லாதிருந்தது. ஆகையால் சர்வேசுரன் தம்முடைய குமாரனைப் பாவ மாம்சத்தின் சாயலாய் அனுப்பி, அவர் திரு மாம்சத்திலே பாவத்தை நடுத்தீர்த்துத் தண்டித்து, நிர்மூலமாக்கினதினால், மாம்ச இச்சைகளுக்கு அடிமைப்பட்டிருந்த பழைய மனிதனை உரிந்துபோட்டு, இஸ்பிரீத்துசாந்துவினாலாகிய புது மனுஷனைத் தரித்துக்கொண்டிருக்கிற நமக்குச் சர்வேசுரனுடைய கற்பனைகளை அநுசரிப்பதற்கு வேண்டிய திராணி உண்டாயிருக்கிறதென்று அர்த்தமாம். ஏனெனில் கிறீஸ்து சேசுநாதரிடத்திலுள்ள ஞான சீவியத்துக்குரிய பிரமாணமானது பாவத்துக்கும் மரணத்துக்குமுரிய பிரமாணத்தினின்று என்னை விடுதலையாக்கினது.

உரோமாபுரியார் 1 6:22

இப்பொழுதோவெனில், பாவத்தினின்று விடுதலையாக்கப்பட்டுச் சர்வேசுரனுக்கு அடிமைகளானதினாலே, உங்களுக்குப் பலனாகப் பரிசுத்ததனமும், முடிவாக நித்திய சீவியமும் கிடைக்கின்றது.

அர்ச். லூக்காஸ் சுவிசேஷம் 4:18

ஆண்டவருடைய இஸ்பிரீத்து வானவர் என்மேலிருக்கிறார். ஆதலால் அவர் என்னை அபிஷேகம்பண்ணித் தரித்திரருக்குச் சுவிசேஷத்தைப் பிரசங் கிக்கவும், இருதயம் நொறுங்கினவர்க ளைக் குணப்படுத்தவும்,

இயாகப்பர் பொது நிருபம் 1:25

சுயாதீனம் தரும் பிரமாணத்தை உற்றுப்பார்த்து, மறக்கிறவனாகாமல், அதிலே நிலைத்து, கிரியையைச் செய் கிறவன் எவனோ, அவனே செய்கையில் பாக்கியவானாயிருப்பான். (அரு. 13:17.)

சங்கீதங்கள் 68:6

ஆண்டவரே! தளங்களுக்குக் கர்த்தரே! உமக்குக் காத்துக்கொண் டிருக்கிறவர்கள் என் நிமித்தம் வெட்க மடையாதிருக்கட்டும்; இஸ்ராயேல் தேவனே, உம்மைத் தேடுகிறவர்கள் என் நிமித்தம் நாணமடையாதிருப் பார்களாக.

சங்கீதங்கள் 97:10

சங்கீதங்கள் 79:9

நடந்து, வழியில் (அதற்கு அல்லது உமது சனங்களுக்கு) முன் பாக நீர் வழிகாட்டும் அதிபதியா

யிருந்தீர்; அதை வேஷருன்றப் பண்ணி னீர்; அது பூமியெங்கும் பரம்பிப் போயிற்று.